*பாடசாலைச் சமூக ஆலோசனைக் குழுக்கள் பற்றி உங்களுக்குத் தகவல் வழங்குவதற்கென இந்த மடிப்புப் பிரசுரம் தயாரிக்கப்பட்டு உள்ளது*

**டியுறாம் பிரதேசக் கல்விச் சபை உங்கள் பாடசாலைச் சமூக ஆலோசனைக் குழுவில் ஓர் அங்கத்தவராகச் சேருவதற்கு நீங்கள் முன்வரவேண்டுமென ஆர்வமூட்ட விரும்புகிறது**

**மாணவர்கள் கல்வி பயிலுவதை முன்னேற்றும் நோக்கத்துடன் நாம் ஒன்று சேர்ந்து உழைப்பதற்கு உங்கள் பங்களிப்பு அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது**

**பெற்றோர் பங்காற்றும் பணிச் செயற்குழு (Parent Involvement Committee) என்றால் என்ன?**

சமூக ஆலோசனைக் குழுக்களுக்குத் தகவல் வளங்கள் மற்றும் தொழில்முறை அபிவிருத்தி என்பவற்றை வழங்கும் ஒரு பிரதேசக் குழுவாக பெற்றோர் பங்காற்றும் பணிச் செயற்குழு அமைந்துள்ளது. டியுராம் பிரதேசப் பாடசாலைச் சபைக்குரிய அனைத்துப் பாடசாலைச் சமூக ஆலோசனைக் குழுக்களின் பிரதிநிதிகள், கல்வித்துறை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், சமூக அங்கத்தவர்கள், பாடசாலை மற்றும் பாடசாலைச் சபைப் பணியாளர்கள் ஆகியோர் இக்குழுவில் இடம் வகிக்கின்றனர்.

**உங்கள் பாடசாலைச் சமூக ஆலோசனைக் குழுவில் ஓர் அங்கத்தவர் ஆவதற்கு உங்களுக்கு யோசனை உண்டா?**

மேலதிகத் தகவல்பெறத் தொலைபேசியில் உங்கள் பாடசாலை அதிபரை அழையுங்கள். அல்லது தொடர்பு கொள்ளுங்கள் SCC குழுக்களுக்குப் பொறுப்பாக உள்ள கல்வி மேலதிகாரி (superintendent) தொலைபேசி எண்: (905) 666- 5500

**பெற்றோருக்கு உரிய தகவல் மூலவள இணையத்தளங்கள் இவை:**

**www.durham.edu.on.ca**
**(தெரிவு செய்யுங்கள் Parent Resources: அதன் பின்பு School Community Councils)**
**www.edu.gov.on.ca**
**www.edu.gov.on.ca/abc123**
**www.eqao.com**
**www.ontarioparentcouncil.org**

*நன்றி உரித்தாகுக.*
*டியுறாம் பிரதேச பாடசாலைச் சபையின் பெற்றோர் பங்காற்றும் பணிச்செயற்குழு*

School Community Councils
— Parents Supporting School Success —

## பாடசாலைச் சமூக ஆலோசனைக் குழுக்கள்

**-பாடசாலை வெற்றிக்குத் துணை நிற்கும் பெற்றோர்-**



**உங்கள் பிள்ளையின் பாடசாலையில் பங்குபற்றப் பிரமாதமான ஒரு வழி**

## பாடசாலைச் சமூக ஆலோசனைக் குழுக்கள் பற்றி உங்களிடம் இருக்கக் கூடிய கேள்விகள்

### பாடசாலைச் சமூக ஆலோசனைக் குழு என்றால் என்ன?

பாடசாலைச் சமூக ஆலோசனைக் குழு (SCC) என்பது ஆர்வமுள்ள பெற்றோர்கள், பாடசாலைப் பணியாளர்கள், சமூக அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து அமைக்கும் ஒரு குழு. இக்குழு பாடசாலை அதிபருடன் சேர்ந்து செயல்பட்டு பாடசாலை மாணவர்களின் நலன் பேணுகிறது.

### ஒரு SCC குழு செய்வது என்ன?

SCC குழு பாடசாலை தொடர்பிலான எல்லா விடயங்களிலும் அதிபருக்கு ஆலோசனை வழங்கி, மாணவர்களின் சாதனைக்குத் துணை நிற்கிறது. குறிப்பிட்ட பாடசாலை விடயங்கள் (உ-ம்: ஆரோக்கிய சிற்றுண்டித் திட்டம்) பற்றி பேற்றோரின் சமூகத்துக்குத் தகவலை எடுத்துச் செல்லவும் இவை உதவுகின்றன.

### எனது பாடசாலையில் ஒரு SCC குழு இருக்கிறதா?

ஆம். ஒன்ராறியோவில் அரச நிதியில் இயங்கும் ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு SCC குழு இருக்கிறது.

### SCC குழு எவ்வளவு காலத்துக்கு ஒரு முறை கூடுகிறது?

SCC குழு ஒவ்வொரு பாடசாலை வருடத்திலும் ஆகக் குறைந்தது நான்கு தடவைகளாவது சந்திக்கும். பல குழுக்கள் இதற்கு அதிகமாகவும் சந்திக்கின்றன.

### எனது பாடசாலையின் SCC குழுக் கூட்டங்களுக்கு நான் போகலாமா?

ஆம். எல்லாக் கூட்டங்களும் பொதுமக்களை அனுமதிக்கின்றன. ஆனால் விடயங்களில் வாக்கு அளிப்பதற்கு நீங்கள் ஒரு SCC அங்கத்தவராக இருக்க வேண்டும். உங்கள் பாடசாலை SCC குழுவின் அடுத்த கூட்டத் திகதியை அறியப் பாடசாலை அதிபரைத் தொலைபேசியில் அழையுங்கள்.

### எனது SCC குழுவில் எப்படி நான் ஓர் அங்கத்தவர் ஆக முடியும்?

பாடசாலை வருடத்தின் ஆரம்பத்தில் நியமனப் படிவம் ஒன்றை நிரப்பிப் பாடசாலை அதிபரிடம் கையளியுங்கள். பாடசாலை ஆரம்பித்த முதல் மாதத்தில் பெற்றோராயுள்ள அங்கத்தவர் தேர்தல் தேவைப்படின் நடைபெறும்.



### ஒரு SCC அங்கத்தவராக நான் ஆகிய பின்பு என்ன செய்யவேண்டி இருக்கும்?

ஒரு வருடத்தில் நடைபெறும் எல்லா SCC கூட்டங்களுக்கும் சென்று அங்கு நடைபெறும் தீர்மான முயற்சிகளில் பங்குபற்ற வேண்டும்.

மேலும், பாடசாலை மற்றும் SCC குழு முன்னெடுக்கின்ற பணிகளுக்குப் பல SCC குழுக்கள் நிதி திரட்டுவதும் உண்டு.

### எனது பிள்ளையின் பாடசாலை SCC குழுவில் நான் பங்குபற்றுவதனால் எனக்கு என்ன நன்மை கிட்டுகிறது?

SCC குழு அங்கத்தவர்கள் பாடசாலையில் நடைபெறும் விடயங்களை உடனுக்குடன் அறிய முடிகிறது. பாடசாலை விடயங்களில் அதிபருக்கு ஆலோசனை கூறுவதில் சம்பந்தப்பட முடிகிறது. SCC குழுவுடன் அதிபர்கள் தொடர்ந்து தொடர்பினைப் பேணி வருவர்.

### SCC குழுக்கள் பாடசாலைகளில் உண்மையான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றனவா?

SCC குழுக்கள் இவை போன்ற திட்டங்களை ஒழுங்கு செய்து ஆதரித்து வந்து உள்ளன:

- ☐ குடும்ப கல்வித் தகைமை மற்றும் கணித இரவுகள்
- ☐ வீடுகளில் வாசிக்கும் திட்டங்கள்
- ☐ காலையுணவுஆரோக்கிய சிற்றுண்டித் திட்டங்கள்
- ☐ நிதி திரட்டும் செயல்திட்டங்கள்

SCC குழுக்கள் அதிபருக்கும் பாடசாலைச் சபைக்கும் பலவித விடயங்களில் ஆலோசனை கூற முடியும். அவற்றில் சில:

- ☐ மாணவர்களின் சாதனை
- ☐ மாணவர் நடத்தை விதிக் கோவை
- ☐ மாணவர்களைப் பாதிக்கும் சபைக் கொள்கைகள் (உ-ம்: மைதான உபகரணங்கள்)
- ☐ நிதி திரட்டிய இலாபம் செலவிடுதல்

